பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

10 06 2025 **TUESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. விளையாட்டுத்துறைக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
2. இந்தியா – சீனா இடையேயான உறவுகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.
3. விளிம்பு நிலை மக்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் வகையில் அறிவியல் கண்டுபிடிப்புகள் அமைய வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் வலியுறுத்தியுள்ளார்.
4. இந்தியா – ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் புதிய துறைகளில் பொருளாதார, வர்த்தக வாய்ப்புகளை உருவாக்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
5. ஆஸ்திரியாவில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் பத்து பேர் உயிரிழந்தனர்.

<u>இனி விரிவான செய்திகள்--</u>

<<<<<<>>>>>

நாட்டில் விளையாட்டுத்துறையை மேம்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டமைப்பு வசதிகள் அத்துறையின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கடந்த 11 ஆண்டுகளில் நாட்டின் விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகள் முன்எப்போதும் இல்லாத வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது குறித்து அத்துறைக்கான அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியாவின் கட்டுரையை பகிர்ந்துள்ள பிரதமர் இதனை தெரிவித்துள்ளார்.

விளையாட்டுத்துறையில் இளைஞர்களை மையமாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகள் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வெல்லும் வாய்ப்பை அதிகரிக்க உதவிடும் என்று திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

நாடு முழுவதும் வெள்ள பாதிப்புகளை எதிர்கொள்வதற்கான தயார் நிலை குறித்து உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று ஆய்வு செய்தார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில், வெள்ளத்தடுப்பிற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

இந்தியா – சீனா இடையே நேரடி விமான போக்குவரத்து சேவையை தொடங்குவது குறித்து அந்நாட்டுடன் ஆலோசனை நடத்தப்பட்டு வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

பிரான்சில் பத்திரிகை நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், இருநாடுகளுக்கும் இடையேயான உறவுகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

தீவிரவாத செயல்களுக்கு எதிரான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டு வருவதாகவும், இது எந்தவொரு நாட்டிற்கும் எதிரானது அல்ல என்றும் தெளிவுபடுத்தினார்.

தீவிரவாதிகளுக்கு புகலிடம் அளிப்பதை பாகிஸ்தான் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

வளர்ந்துவரும் நாடுகளுக்காக இந்தியா தொடர்ந்து குரல் கொடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

ரஷ்யா – யுக்ரைன் இடையேயான போரை விரைவில் முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

பாதுகாப்பு, அணு எரிசக்தி, செயற்கை நுண்ணறிவு, விண்வெளி மற்றும் சுற்றுச்சூழல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியா – பிரான்ஸ் நாடுகள் இடையேயான ஒத்துழைப்பு மேலும் வலுவடைந்து வருவதாக திரு ஜெய்சங்கர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்த உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொலி மூலம் உரையாற்றிய அவர், இந்திய மொழிகளில் தொன்மை வாய்ந்த மொழியான தமிழ் மொழியை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின்மூலம், மக்களின் அன்றாட பயன்பாட்டிற்கு உகந்த வகையில் மாற்றுவதற்கு மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப இத்திட்டத்தை மக்கள் இயக்கமாக உருவெடுக்கச் செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

மக்களின் அன்றாட வாழ்வில் பயன்படும் மின்னணு சாதனங்களில் தமிழ் மொழியை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் இணைப்பதன்மூலம், மேலும் பயனுள்ளதாக்க முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

மின்னணு சாதனங்களின் உற்பத்தி மையமாக தமிழகத்தை உருவெடுக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளில் மத்திய அரசு கவனம் செலுத்தி வருவதாக அவர் கூறினார்.

கணினி, மொபைல், மடிக்கணினி உள்ளிட்ட மின்னணு சாதனங்களின் உற்பத்தியை தமிழகத்தில் மேற்கொள்வதற்கான அனுமதி அண்மையில் வழங்கப்பட்டுள்ளதை திரு அஷ்வினி வைஷ்ணவ் சுட்டிக்காட்டினார்.

<<<<<<>>>>>

இந்தியா – ஐரோப்பிய யூனியன் நாடுகள் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் புதிய துறைகளில் பொருளாதார, மற்றும் வர்த்தக வாய்ப்புகளை உருவாக்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், சுவிட்சர்லாந்தின் பெர்ன் நகரில் அந்நாட்டு தொழில் நிறுவனங்களின் தலைவர்களுடன் மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் நடத்திய பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலீடுகளை ஈர்க்கும் வகையில், வர்த்தக நடைமுறைகளை எளிமைப்படுத்தும் முயற்சிகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தைப்படுத்துதல், திறன் மேம்பாடு மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளுக்கான மையமாக இந்தியாவை உருவெடுக்க செய்வதற்கான நடவடிக்கைகளில் மத்திய அரசு கவனம் செலுத்தி வருவதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>

விளிம்பு நிலை மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் அறிவியல் கண்டுபிடிப்புகள் அமைய வேண்டும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் வலியுறுத்தியுள்ளார்.

ஹைதராபாதில் நடைபெற்ற இளம் விஞ்ஞானிகள் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், வளர்ச்சியடைந்த இந்தியாவின் இலக்குகளை எட்டும் வகையில், அறிவியல் கண்டுபிடிப்புகளின் அவசியம் குறித்து எடுத்துரைத்தார்.

வசுதைவ குடும்பகம் என்ற தத்துவத்தின்கீழ், ஒரே பூமி – ஒரே குடும்பம் - ஒரே எதிர்காலம் என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில் இந்தியாவின் வாழ்வியல் நடைமுறைகள் அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

உலக நாடுகளை ஒன்றிணைக்கும் வகையில் சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பு, பேரிடர் மீட்புக்கான உள்கட்டமைப்பு உள்ளிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்கால தலைமுறையினருக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் அறிவியல் கண்டுபிடிப்புகள் இருக்க வேண்டும் என்று திரு தர்மேந்திர பிரதான் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>

நீர்நிலைகளை பராமரிப்பதில் சிறந்து விளங்கும் மாவட்டங்களுக்கு மத்திய அரசு விருதுகள் வழங்கி ஊக்குவித்து வருகிறது.

இதன்படி, இந்த ஆண்டுக்கான விருதுக்கு தமிழகத்தின் நெல்லை மற்றும் நாமக்கல் மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

நாடுமுழுவதும் வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கம் மத்திய அரசின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வேளாண் விளைபொருட்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கிலும், விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு குறித்து எடுத்துரைப்பதற்காகவும் இந்த இயக்கம் நடத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக தமிழகத்தின் திருவள்ளூர் மாவட்டத்தில் உவர் நீர் மீன் வளர்ப்பு நிறுவனத்தின் சார்பில் மீன் வளர்ப்பதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருவதாக அதன் முதன்மை விஞ்ஞானி திருமதி சாந்தி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

ஆஸ்திரியாவில் உள்ள பள்ளி ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் பத்து பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

**Graz** நகரில் உள்ள உயர்நிலைப்பள்ளி ஒன்றில் இந்த துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து, காவல்துறையினர் அப்பள்ளியில் இருந்த மாணவர்களையும், ஆசிரியர்களையும் பத்திரமாக மீட்டுள்ளதாக அந்த தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

<<<<<<>>>>>

ஏமன் துறைமுகத்தை குறிவைத்து இஸ்ரேல் கடற்படை தாக்குதல் நடத்தியுள்ளது.

ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஆயுதத்தை கொண்டுசெல்வதற்கு இந்த துறைமுகத்தை பயன்படுத்தி வருவதையடுத்து, இஸ்ரேல் கடற்படை ஏவுகணை மூலம் இந்த தாக்குதலை மேற்கொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதலில், இரண்டு கப்பல்கள் சேதமடைந்துள்ளதாக ஹவுதி அமைப்பு உறுதிபடுத்தியுள்ளது.

<<<<<<>>>>>

தில்லி, ஹரியானா, சண்டிகர், ஜம்மு காஷ்மீர், லடாக், மத்தியப்பிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தான் மற்றும் உத்தரப்பிரதேசத்தில் வெப்ப அலை வீசும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, அடுத்த இரண்டு நாட்களுக்கு அதிக வெப்ப அலைக்கான ஆரஞ்ச் நிற எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

<<<<<<END>>>>>